கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அசல் வழக்கு எண். 288/2022

வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **கருப்புச்சாமி** | தொழில் | |
| தகப்பனார் பெயர் | **காளியப்பன்** | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 09.09.2024 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

வா.சா.1.கருப்புச்சாமி தரப்பில் முதல் விசாரணை பிரமாண நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்டது.

நான் வழக்கின் வாதி. என் தரப்பில் முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் அனைத்தும் சரிதான். நான் படித்துப்பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகின்றன.

1. வா.சா.ஆ.1 – 20.03.2021 பிரதிவாதி எனக்கு எழுதிக் கொடுத்த ஆதரவு அசல்

2. வா.சா.ஆ.2 – 25.08.2021 பிரதிவாதிக்காக நான் வங்கியில் பணம் செலுத்தியதற்கான ரூ.4 லட்சத்திற்கான காசோலை ஜெராக்ஸ் நகல்.

3. வா.சா.ஆ.3 – **11.10.2021 பிரதிவாதிக்காக நான் வங்கியில் பணம் செலுத்தியதற்கான ரூ.18,25,000/– தொகைக்கான காசோலை ஜெராக்ஸ் நகல். ( மேற்படி வா.சா.2. மற்றும் வா.சா.3 காசோலைகளின் அசல் ஆவணங்கள் வங்கியில் கொடுக்கப்பட்டுவிட்டதால் அதன் ஜெராக்ஸ் நகல் செய்கிறேன்.**

( மேற்படி வா.சா.2 மற்றும் வா.சா.3 ஜெராக்ஸ் ஆவணம் என்பதால் பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்ய ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபணைக்குட்பட்டு 2 ஆவணங்களும் குறியீடு செய்யப்படுகிறது. )

4. வா.சா.ஆ.4 – பிரதிவாதி சொத்தை கிரையம் வாங்கியதை காட்டும் வில்லங்க சான்றிதழ் கணிணி பதிவிறக்க நகல்

5. வா.சா.ஆ.5 – பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை கிரையம் செய்ததை காண்பிக்கும் 1.1.2015 முதல் 12.07.2022 வரைக்கான வில்லங்க சான்றிதழ்கள்(3 எண்ணிக்கை) கணிணி பதிவிறக்க நகல்

6. வா.சா.ஆ.6 – 20.01.2015 பிரதிவாதி மணிகண்டனிடம் கிரையம் வாங்கிய சொத்திற்கான கிரையப் பத்திரத்தின் கணிணி பதிவிறக்க சான்றிதழ் நகல்

7. வா.சா.ஆ.7 – பிரதிவாதி கையொப்பம் செய்து என்னிடம் கொடுத்த 5 புரோ நோட்டுக்கள், அதில் 1 மட்டும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மற்ற 4 புரோநோட்டுக்களில் தொகை மட்டுமே எழுதப்பட்டுள்ளது. அசல்

(வா.சா.ஆ.4 வா.சா.ஆ.5, மற்றும் வா.சா.6 கணினி பதிவிறக்க நகல்கள் ஆகும், ஆனால் அவற்றுக்கு இந்திய சாட்சிய சட்டம் 65(B)(4) சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை)

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.09.09 19:04:53 +0530

Additional District Judge,

Dindigul.